# புதுச்சேரி கட்டிட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் நலவாரியம், D1-தொழிற்பேட்டை, தட்டாஞ்சாவடி, புதுச்சேரி.

புதுச்சேரி ஆட்சிப் பிரதேசத்தில் வாழும் பல்வேறு வகையான கட்டிட தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு சமூக பாதுகாப்பு மற்றும் நல உதவிகளைச் செய்யும் நோக்கோடு கட்டிட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் நலவாரியம் புதுவை அரசால் உருவாக்கப்பட்டு சீரிய முறையில் செயல்பட்டு வருகின்றது.

<u>உறுப்பினராவதற்கான தகுதிகள்:</u>

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் தொடர்ந்து வசித்து வரும் 18 வயது முதல் 60 வயது பூர்த்தி ஆகாத கட்டிட தொழிலாளர்கள் அனைவரும் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்து கொள்ள தகுதி உள்ளவர்களாவர்.

1) பதிவு கட்டணமாக ரூ.25/– செலுத்த வேண்டும்.
2) ஆண்டு சந்தாவாக ரூ.100/– செலுத்த வேண்டும்.

கட்டிட நலவாரியத்தில் பல்வேறு வகையான கட்டிட தொழிலாளர்கள் பயனாளிகளாக பதிவு செய்துள்ளார்கள் மொத்தம் 39,428 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளார்கள். நலவாரிய உறுப்பினர்கள் அனைவரும் ஆயுள் காப்பீட்டு கழகத்தின் “ ஜன பீம யோஜனா ” ( ஆம் ஆத்ம பீம யோஜனா திட்டம் என பெயர் மாற்றப்பட்டுள்ளது ) திட்டத்தின் கீழ் பயனடைய வகை செய்யப்பட்டுள்ளது.

<u>மேற்படி நலவாரியத்தால் வழங்கப்படும் உதவிகள்:–</u>

1) நலவாரிய உறுப்பினார்களின், 9ம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படிக்கும் பிள்ளைகளுக்கு கல்வி உதவித்தொகை ரூ.1,200/– வழங்கப்படுகிறது.

2) மகப்பேறு உதவி ரூ.1,500/– பெண் பயனாளின் இரண்டு குழந்தைகள் வரை வழங்கப்படுகிறது.

3) திருமண உதவித்தொகை ரூ.5,000/– இரண்டு வருடம் கடந்த பெண் உறுப்பினர்களுக்கும் மற்றும் உறுப்பினர்களின் இரண்டு குழந்தைகளுக்கும் வழங்கப்படுகிறது.

4) இயற்கையாக மரணமடையும் உறுப்பினர் குடும்பத்திற்கு ரூ.30,000/– வழங்கப்படுகிறது.

5) விபத்தில் மரணமடையும் உறுப்பினர் குடும்பத்திற்கு ரூ.75,000/– வழங்கப்படுகிறது.

6) ஈமச்சடங்கு உதவிதொகை ரூ.2,000/– இறந்த உறுப்பினரின் வாரிசு சார்ந்தவர்க்கு நலவாரியத்தால் வழங்கப்படுகிறது.

7) விபத்து அல்லது நோயினால் பாதிக்கப்பட்டு ஐந்து நாட்களுக்கு மேலாக உள்நோயாளியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு முதல் ஐந்து நாட்களுக்கு ரூ.200/–ம் அடுத்த ஒவ்வொரு நாளுக்கும் ரூ.20/– வீதம் அதிக பட்சமாக ரூ.720/–ம் வாரியம் மூலம் மருத்துவ உதவித்தொகை வழங்கப்படுகிறது.

8) பண்டிகைகால உதவிதொகையாக ரூ.500/–பரிசு கூப்பன் **(Gift Coupon)** வழங்கபடுகிறது.

<u>28.01.2013 முதல் அமுலுக்கு வந்துள்ள நல உதவிகள் பின்வருமாறு:-</u>

1) மகப்பேறு உதவித்தொகை ரூ.1500/-ஐ உயர்த்தி ரூ.3,000/- ஆக வழங்கப்படுகிறது. மேலும் தற்போது மகப்பேறு உதவித்தொகையாக ரூ.3000/- ஆண் உறுப்பினரின் மனைவிக்கும் இரண்டு பிள்ளைகள் வரை வழங்கப்படுகிறது.

2) ஈமச்சடங்கு உதவித்தொகையை ரூ.2,000/-ஐ உயர்த்தி ரூ.5,000/- ஆக வழங்கப்படுகிறது.

3) எலும்பு முறிவு அல்லது நோயினால் பாதிக்கப்பட்டு வீட்டில் இருக்கும் ஆண்/பெண் பயனாளிகளுக்கு உடல்நிலை குணமடையும் வரை மாதம் ஒன்றுக்கு மருத்துவ உதவித்தொகையாக ரூ.1,500/-ம் வாரியம் மூலம் வழங்கப்படுகிறது.

<u>மேலும் தற்போது இவ்வாரியம் கல்வி உதவித்தொகையாக</u> பயனாளியின் பிள்ளைகளுக்கு <u>கீழ்கண்ட பட்டப்படிப்புகளுக்கு வழங்கப்படுகிறது.</u>

| | |
|---|---|
| 1) மருத்துவக்கல்வி உதவித்தொகை (M.B.B.S/B.D.S) | ரூ.50,000/- |
| 2) பொறியியல் கல்வி உதவித்தொகை (B.E./B.Tech) | ரூ.25,000/- |
| 3) பொறியியல் பட்டயப்படிப்பு உதவித்தொகை (Dipl.Engg.) | ரூ.10,000/- |
| 4) பட்டமேற்படிப்பு உதவித்தொகை | ரூ. 2,000/- |
| 5) பட்டப்படிப்பு உதவித்தொகை | ரூ. 1,000/- |
| 6) தொழிற்கல்வி மேல் பட்டயப்படிப்பு உதவித்தொகை | ரூ. 1,500/- |
| 7) தொழிற்கல்வி பட்டயப்படிப்பு உதவித்தொகை (பொறியியல் நீங்கலாக) | ரூ. 1,000/- |

மேற்படி நலவாரியம், மேல்நிலை +2 (அ) அதற்கு சமமான பொதுத்தேர்வில் புதுவை மாநிலத்தில் அதிக மதிப்பெண் பெற்ற பயனாளிகளின் பிள்ளைகளுக்கு கீழ்கண்டவாறு பரிசு வழங்கப்படுகிறது.

1. முதல் பரிசு ரூ.50,000/–
2. இரண்டாம் பரிசு ரூ.40,000/–
3. மூன்றாம் பரிசு ரூ.30,000/–

பிராந்திய(Region) அளவிலும் ஒவ்வொரு பிராந்தியத்திலும்(Region-wise) கீழ்கண்டவாறு பரிசு வழங்கப்படுகிறது.

1. முதல் பரிசு ரூ.30,000/–
2. இரண்டாம் பரிசு ரூ.20,000/–
3. மூன்றாம் பரிசு ரூ.10,000/–

புதுச்சேரி கட்டிட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் நலவாரிய பயனாளிகளின் மேற்கண்ட நலதிட்ட உதவிகள் வழங்கப்பட்டுவருகிறது.

புதுச்சேரி கட்டிட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் நலவாரியம் மற்றும் புதுச்சேரி அமைப்பு சாரா தொழிலாளர்கள் நலச்சங்கத்தில் பதிவு செய்துள்ள வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் அனைத்து அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கும், புதுச்சேரி அரசானது ராஷ்ட்ரீய சுவஸ்திய பீம யோஜனா திட்டத்தை முன்னோடி திட்டமாக நீட்டித்துள்ளது.

மாண்புமிகு தொழிலாளர்துறை அமைச்சர் அவர்கள் புதுச்சேரி பிராந்தியத்தில் **22.06.2012** அன்று ராஷ்ட்ரீய சுவஸ்திய பீம யோஜனா திட்டத்தை தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு ஸ்மார்ட் கார்டு (Smart card) வழங்கினார். கீழே கொடுக்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்ட மருத்தவமனைகளில் மருத்துவசிகிச்சை மேற்கொள்வதற்காக **9,488** வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களில் **(11.10.2012** வரை**) 33,223** குடும்ப உறுப்பினர்கள் பயனடையும் வகையில் **(21,861** வாரிய உறுப்பினர்களும் + **11361** அமைப்புசாரா உறுப்பினர்களுக்கும்) ஸ்மார்ட் கார்டு (Smart card) வழங்கப்பட்டது.

1. ஸ்ரீமணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூாரி மற்றும் மருத்துவ ஆராய்ச்சிமையம், மதகடிபட்டு.
2. ஆறுபடை வீடு மருத்துவக்கல்லூாரி மற்றும் மருத்துவமனை, கிருமாம்பாக்கம்.
3. ஸ்ரீவெங்கடேஸ்வரா மருத்துவக்கல்லூாரி மற்றும் மருத்துவ ஆராய்ச்சிமையம் அரியூர்.
4. மகாத்மா காந்தி மருத்துவக்கல்லூாரி மற்றும் மருத்துவ ஆராய்ச்சிமையம், கிருமாம்பாக்கம்.

“ ராஷ்ட்ரிய சுவஸ்திய பீம யோஜனா” எனும் தேசிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் இந்த வருடம் பயன் பெறுவதற்காக புதுச்சேரியில் **18,724** தொழிலாளர்களும், **74,896** குடும்ப உறுப்பினர்களும் காரைக்காலில் **4,333**

தொழிலாளர்களும் 10,633 குடும்பஉறுப்பினர்களும், மாகேயில் 1 தொழிலாளரும் அவர் குடும்ப உறுப்பினர்களும் மற்றும் ஏனாமில் 1,609 தொழிலாளர்களும்,6466 குடும்ப உறுப்பினர்களும் ஸ்மார்ட்கார்டு (Smart card) வினியோகிக்க ஏற்பாடு செய்யபடுகிறது. மேலும் இத்திட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள தொழிலாளர் மற்றும் அவர் குடும்பத்தைச் சார்ந்த மொத்தம் 5 நபர்கள் பயன்பெறலாம். மொத்தம் இத்திட்டத்தில் 98,664 நபர்கள் இந்த வருடம் பயன் பெறுவர் என எதிரிபார்க்கபடுகிறது. தற்பொழுது புதுச்சேரி பிராந்தியத்தில் (Region) கீழ்கண்ட 6 மையங்களில் ஸ்மார்ட் கார்டு (Smart card) வழங்கும் பணி நடந்து வருகிறது

1. வி.வி.பி நகர், தட்டாஞ்சாவடி,
2. முதலியார்பேட்டை
3. அரியாங்குப்பம்
4. சேதராப்பட்டு
5. வில்லியனூர்
6. கிருமாம்பாக்கம்